செய்தி வெளியீடு எண். 311 நாள்.4.4.2010

<u>செய்தி வெளியீடு</u>

## <u>திருவள்ளூர் மாவட்டம், வீரமங்கலம் கிராமத்தில் குளக்கரையின் இரும்புக் கதவு விழுந்து உயிரிழந்த சிறுவன் குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி !</u>

# <u>முதலமைச்சர் கலைஞர் ஆணை!</u>

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், வீரமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு.கார்த்திகேயன் என்பவரின் ஏழு வயது மகன் தேவராஜ், குளக்கரையில் பொருத்தப்பட்டுள்ள இரும்புக்கதவின் மீது ஏறி விளையாடிக் கொண்டிருந்தபோது, கதவு கழன்று சிறுவன் தேவராஜ் மீது விழுந்ததில் அச்சிறுவன் உயிரிழந்தான். இதுகுறித்த தகவல் பள்ளிப்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ்.இராமன் மூலமாகத் தமது கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்து, உயிரிழந்த சிறுவன் தேவராஜ் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (4.4.2010) ஆணையிட்டுள்ளார்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,தலைமைச் செயலகம், சென்னை–9.